

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.07.2023) திருச்சிராப்பள்ளி அரசு பொது மருத்துவமனைக்கு நேரில் சென்று மகப்பேறு பிரிவில் சிகிச்சை பெற்று வரும் தாய்மார்களிடம் அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்து கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், திருச்சிராப்பள்ளி அரசு பொது மருத்துவமனை முதல்வர் டாக்டர் நேரு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



இந்திய நாடாளுமன்றத்தில் அவைத் தலைவராக சிறப்பாகப் பணியாற்றிய ,மேற்குவங்க மாநில மார்க்சிஸ்டகம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவராக விளங்கியவரும், முத்தமிழறிஞர் கலைஞரின் அன்புக்குரிய மறைந்த சோம்நாத் சாட்டர்ஜி அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (25.7.2023) நாடாளுமன்ற மக்களவை சபாநாயகர் ஓம்பிர்லா தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலரஞ்சலி செலுத்தினார்.



மகளிரின் பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்யும் மகத்தான திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை அண்ணா பிறந்த செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் நம் கழக அரசு செயல்படுத்தவுள்ளது. இதற்கான விண்ணப்பப் பதிவுகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வரும் நிலையில், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சிந்தாதிரிப்பேட்டை சமுதாய நலக்கூடத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான சிறப்பு முகாமினை கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்து இணைய சேவை உள்ளிட்ட தொழில்நுட்ப வசதிகளை தயார் நிலையில் வைத்திருந்து கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கான விண்ணப்பங்களை முறையாக பதிவு செய்திடவும், தகுதியுள்ள ஒரு பயனாளி கூட விடுபட்டுவிடக்கூடாது என்ற நோக்கோடு செயல்பட வேண்டுமெனவும் அங்கிருந்த அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

# மணிப்பூரைப் பற்றி பேசச் சொன்னால் கிழக்கிந்திய கம்பெனி பற்றி பேசுவதா?

## பிரதமர் மோடிக்கு மல்லிகார்ஜுன கார்கே பதிலடி!

புதுதில்லி, ஜூலை 25 -

மணிப்பூரைப் பற்றி பேசச் சொன்னால், கிழக்கிந்தியக் கம்பெனி பற்றி பேசுவதா? என்று பிரதமர் நரேந் திர மோடிக்கு, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் மல்லிகார்ஜுன கேள்வி எழுப்பியுள்ளார்.



எதிர்க்கட்சிகள் அழைத்தும் நாடாளுமன்றத்திற்கு வரமறுக்கும் பிரதமர் மோடி, நாடாளுமன்றத்திற்கு வெளியே வீராப்புப் பேச்சில் ஈடுபட்டு வருகிறார். அந்த வகையில், செவ்வாயன்று பாஜக எம்.பி.க்களின் வாராந்திர கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டு பேசினார். அப்போது, “இது நாள் வரையில் நான் இது போன்ற திக்கற்ற எதிர்க்கட்சியினரைப் பார்த்தது இல்லை. ‘இந்தியா’ என்ற பெயருக்காக அவர்கள் தங்களையே புகழ்ந்து கொள்கிறார்கள். ‘கிழக்கிந்திய கம்பெனி’, ‘இந்தியன் முஜாகிதீன்’, ‘பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா’ போன்றவற்றிலும் கூடத்தான் ‘இந்தியா’ என்ற பெயர் இருக்கிறது. எனவே, ‘இந்தியா’ என்ற பெயரால் ஒன்றும் ஆகிவிடாது. நாட்டின் பெயரை மட்டும் வைத்துக் கொண்டு மக்களை தவறாக வழிநடத்த முடியாது. வரும் 2024 மக்களவைத் தேர்தலில் மக்களின் ஆதரவுடன் பா.ஜ.க. எளிதில் வெற்றி பெறும். அவர்கள் (இந்தியா கூட்டணியினர்), எதிர்க்கட்சி வரிசையிலேயே இருப்பார்கள்” என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

அதாவது, ‘இந்தியா’ கூட்டணியை, பயங்கரவாத இயக்கங்களில் இருக்கும் ‘இந்தியா’ என்ற பெயரோடு ஒப்பிட்டு பிரதமர் மோடி, தனது வயிற்றெரிச்சலைக் கொட்டினார். இதற்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மாநிலங்களவையில் பதிலளித்தார்.

அப்போது, “மணிப்பூரில் கலவரம் நடக்கிறது, மாநிலமே பற்றி எரிகிறது. அதைப்பற்றி பிரதமர் மோடி பேச வேண்டும் என, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்துள்ளனர். ஆனால், அவர் (மோடி) தற்போது கிழக்கிந்திய கம்பெனி பற்றி பேசுகிறார்” என பதிலடி கொடுத்தார். இதேபோல காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியும் பிரதமர் மோடிக்கு ட்விட்டரில் பதிலளித்துள்ளார். அதில், “நீங்கள் எங்களை எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம்.. மிஸ்டர் மோடி. ஆனால், நாங்கள்தான் இந்தியா. மணிப்பூரை மீட்டெடுக்க நாங்கள் உதவுவோம்; அங்குள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் கண்ணீரை துடைப்போம்; மணிப்பூரில் அன்பு மற்றும் அமைதியை நாங்கள் மீண்டும் கொண்டு வருவோம். இந்தியாவின் அடிப்படை கொள்கைகளை மணிப்பூரில் மீண்டும் கட்டியெழுப்புவோம்” என்று கூறியுள்ளார்.

# மின்சார வாகனங்களுக்கு வழங்கும் மானியத்தை ஒன்றிய அரசு நிறுத்தியது ஏன்?

## மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் மக்களவையில் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 27-

மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் ‘மின்சார வாகனங்களின் விரைவான உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டுக்கு விரைந்து மாறுதல்’ (FAME) எனும் திட்டத்தின் மூலம் மின்சார வாகனங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வந்தது. இதன் மூலம் மின்சார வாகனங்களின் பயன்பாடும் அதிகரித்து வந்த நிலையில் கடந்த 18 மாதங்களாக ஒன்றிய அரசு அந்த மானியத்தை நிறுத்தி வைத்துள்ளது ஏன் என்றும் இத்திட்டத்தின் செயல்பாட்டில் நடைமுறை நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை ஒன்றிய அரசு உறுதி செய்யுமா என்றும் பல்வேறு கேள்விகளை ஒன்றிய கனரக தொழிற்துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு :

இந்தியாவில் மின்சார வாகனங்களின் விரைவான உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டுக்கு விரைந்து மாறுதல் (FAME II) திட்டத்தின் இரண்டாம் பகுதி சீர்குலைக்கப்பட்டு வருவதாக மின்சார வாகன உற்பத்தியாளர்களின் சங்கம், நிதி ஆயோக் குழுவை அணுகியது உண்மையா என்றும் அவ்வாறெனில் அது குறித்த விவரங்கள் மற்றும் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.



கடந்த 18 மாதங்களாக மின்சார வாகனங்களின் விரைவான உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டுக்கு விரைந்து மாறுதல் (FAME II) திட்டத்தின் இரண்டாம் பகுதிக்கான மானியத்தை நிறுத்துவதற்கான அரசாங்கத்தின் முடிவின் பின்னணியில் உள்ள காரணங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு மானியத்தை நிறுத்தி வைத்ததின் மூலம் தேசிய மின்சார இயக்கத் திட்டம் மற்றும் மின்சார வாகனங்களின் விரைவான உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டுக்கு விரைந்து மாறுதல் (FAME II) திட்டத்தில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

மின்சார வாகனங்களின் விரைவான உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டுக்கு விரைந்து மாறுதல் (FAME II) திட்டத்திற்கான இரண்டாம் பகுதியின் மானியத்தை வாகன உற்பத்தியாளர்கள் தவறாகப் பயன்படுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டு மீது ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

இந்த திட்டத்தின் செயல்பாட்டில் நடைமுறை நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை ஒன்றிய அரசு உறுதி செய்யுமா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

மின்சார வாகனங்களுக்கான மானியத்தை நிறுத்தி வைத்துள்ளதால் மக்கள் மின்சார வாகனங்களுக்கு விரைந்து மாறுதலில் உள்ள சிக்கல், அசல் உபகரண உற்பத்தியாளர்கள் (OEM) மற்றும் தொடக்க நிலை நிறுவனங்கள் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்து மின்சார வாகன உறுபத்தியாளர்களின் சங்கம் எழுப்பிய கவலைகளை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசு முன்மொழிகிறதா என கேள்வி எழுப்பினார்.

